**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம், தை மாதம் 5 நாள்

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ம் நாள் திங்கள்கிழமை

**<u>E.A. No.3/2025</u>**

**in**

**E.P.No.1/2025**

**in**

**O.S.No.775/2017**

சுப்பிரமணியத்திற்காக

தனி அதிகார முகவர் திருமதி.சரஸ்வதி ... **மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர்**

//எதிர்//

1. நாயகம்

2. தனலட்சுமி

3. மஞ்சுளா

4. ஈஸ்வரி

5. ஈஸ்வரன்

6. பாலசுப்பிரமணியம்

7. நமோ கதிரவன் @ நமோ கதிர்வேல்

8. தங்கமுத்து (இறந்துவிட்டார்)

9. சுந்தராம்பாள்

10. சரஸ்வதி

11. ஈஸ்வரி

12. லட்சுமி ... **எதிர்மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள்**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.பூபதி, அவர்கள் ஆஜராகியும், 1, 2 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பூமிநாதன், அவர்கள் ஆஜராகியும் எதிருரை தாக்கல் செய்யவில்லை என்று குறிப்பிட்டும், 4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P.K.பிரபுராம், அவர்கள் ஆஜராகியும், 6 மற்றும் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.சித்ரா, அவர்கள் ஆஜராகியும், 8 ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட படியும், 9 முதல் 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சக்திவேல், அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 3 விதி 2 மற்றும் பிரிவு 151 ன் கீழ் மனுதாரரின் பொது அதிகார முகவராக திருமதி.சரஸ்வதியை நியமித்து உத்திரவு பிறப்பிக்குமாறு மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:

1.1). பிரமாணதாரர் இந்த நிறைவேற்று மனுவில் தரப்பினர் இல்லை. மேற்படி மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் சுப்பிரமணியம் அவர்கள் பிரமாணதாரரின் கணவர் ஆவார். மேற்படி நிறைவேற்று மனுவை பிரமாணதாரரின் கணவர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக, அசல் வழக்கு எண்.775/2011 ல் கணம் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை நிறைவேற்ற வேண்டி தாக்கல் செய்துள்ளார். மேற்படி நிறைவேற்றுமனு நிலுவையில் உள்ள இந்த சமயத்தில் மேற்படி மனுதாரரான பிரமாணதாரரின் கணவர் சுப்பிரமணியம் அவர்களுக்கு கடந்த 23.05.2025 தேதி முதல் சிறுநீரக செயலிழப்பு, கால்களில் வீக்கம், மூச்சுத்திணறல், மயக்கம், இருதயத்துடிப்பில்

வேறுபாடு உள்ளிட்ட உடல்நலக் கோளாறால் மிகுந்த பாதிப்புக்கு ஆளாகியுள்ளார். எனவே மருத்துவரின் பரிந்துரையின்பேரில் வாரம் இரண்டுமுறை Hemo Dialysis (ரத்த சுத்திகரிப்பு) செய்து வருகிறார். அவ்வப்போது ரத்த அழுத்தத்தில் மிகுந்த மாறுபாடு ஏற்பட்டு அவருக்கு மிகுந்த உடல்நலக்குறைவு ஏற்பட்டு அதனால் அவதிப்படுகிறார். அவரது மருத்துவ அறிக்கை மற்றும் Hemo Dialysis (ரத்த சுத்திகரிப்பு) ரசீதுகள் ஆகியவற்றை இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ளார். அதனையும் இந்த பிரமான வாக்குமூலத்தின் ஒரு அங்கமாக பாவிக்க வேண்டுகிறார்.

1.2). மேற்படி மனுதாரரான பிரமாணதாரரின் கணவர் தற்போது நடமாட முடியாமல் படுக்கையாக உள்ளார். இந்நிலையில் நேற்று 24.10.2025 தேதியில் மேற்படி வழக்கு மற்றும் இதர வழக்குகளில் பிரமாணதாரரை மனுதாரரின் தனி அதிகார முகவராக நியமித்து ஒரு நோட்டரி வழக்கறிஞர் சான்றிட்ட தனி அதிகார ஆவணம் ஒன்றை ஏற்படுத்திக்கொடுத்துள்ளார். மேற்படி தனி அதிகார ஆவணம் இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்படுகிறது. அதன்படி மனுதாரரின் தனி அதிகார முகவராக பிரமாணதாரரை மேற்படி வழக்கில் நியமிப்பது அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளது. எனவே பிரமாணதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இம்மனு அனுமதிக்கப்படாவிட்டால் மனுதாரரும், மனுதாரரது குடும்பத்தாரும் பெருத்த கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாக நேரிடும். மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**<u>2). 4 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்ருரையின் சுருக்கம்</u>** :

2.1). மனுதாரர் தாக்கல் செய்த மனுவானது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல. மனு பொய்யானது. 4 ம் எதிர்மனுதாரர் குறிப்பாக ஒப்புக் கொள்ளப்பட்டவை தவிர, மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். இந்த மனு மனுதாரர் தரப்பு சாட்சியத்திற்காக நிலுவையில் உள்ளது. மனுதாரர் நலமாக இல்லை என்றும், ஹீமோ டயாலிசிஸால் அவதிப்படுகிறார் என்றும் கூறுவது தவறானது. எனவே, மனுதாரர் தனது மனைவி மூலம் வழக்கை நடத்த அனுமதிப்பது சட்டத்தின் கீழ் பராமரிக்க

முடியாதது.

2.2). இந்த 4ம் எதிர்மனுதாரர் மற்றும் பிற எதிர்மனுதாரர்கள் மீது எல்லைகளை நிர்ணயிப்பதில் இருந்து நிவாரணம் மற்றும் வழக்கு சொத்தின் மீது சுவாதீனம் வழங்குவதற்காக நிறைவேற்று மனுவை தாக்கல் செய்துள்ளார். இப்போது இந்த வழக்கு மனுதாரர் தரப்பு சாட்சியத்திற்காக நிலுவையில் உள்ளது. வழக்கின் முழு உண்மைகளையும் மனுதாரர் மட்டுமே அறிவார், மேலும் அவர் தான் இந்நீதிமன்றத்தின் முன் சாட்சியமளிக்கத் தகுதியுடையவர் ஆவார். இந்நீதிமன்றத்தின் முன் சாட்சியமளிப்பதற்காக நீண்ட நேரம் நடக்கவோ நிற்கவோ மனுதாரரால் இயலாவிட்டாலும், சட்டத்திற்கு உட்பட்ட முறையில் மனுதாரர் தரப்பு சாட்சியங்களை அளிப்பதற்கு மனுதாரருக்குப் பல வழிமுறைகள் உள்ளது. மேலும், மனுதாரர் பல வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளார், அவை அனைத்தும் இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. சாட்சியமளிப்பதில் இருந்து தப்பிப்பதற்காக மனுதாரர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார், இது ஒருபோதும் ஏற்கத்தக்கது அல்ல. மனுதாரர் இந்நீதிமன்றத்தின் முன் சாட்சியமளித்தால், முழு உண்மைகளும் வெளிவரும். உண்மைகளை மறைப்பதற்காகவும், மனுதாரரின் மனைவியின் தூண்டுதலின் பேரிலும் மனுதாரர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தூய்மையான கரங்களுடன் இந்நீதிமன்றத்தின் முன் வரவில்லை, மேலும் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மருத்துவச் சான்றிதழ் உண்மையானது அல்ல. இந்த மனுவில் எந்த முகாந்திரமும் இல்லை. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**<u>3). 9 முதல் 12 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :</u>**

3.1). மனுதாரர் தாக்கல் செய்த மனுவானது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல. மேலும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானவை. மனுதாரர் இந்த நிறைவேற்று மனுவின் தரப்பினர் இல்லை என்பதும் மேற்படி மனுதாரர்/தீர்ப்பானை பெற்றவர் சுப்பிரமணியம் அவர்கள் மனுதாரரின் கணவர் ஆவார்

என்பதையும், மேற்படி நிறைவேற்று மனுவை மனுதாரரின் கணவர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக அசல் வழக்கு எண்.775/2011-ல் இந்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை நிறைவேற்றவேண்டி தாக்கல் செய்துள்ளார் என்பதையும் மனுதாரரே நீரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மேலும் கடந்த 19.09.2025 தேதியில் மனுதாரரின் கணவர் இந்திமன்றத்தில் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா..சா.ஆ.1 முதல் 6 வரை ஆவணங்கள் குறியீடு செய்யதுள்ளார் என்பதையும் இந்த எதிர்மனுதாரர்கள் ஒத்துக்கொள்கிறார்கள்.

3.2). மேற்படி மனுவில் சொல்லியுள்ளபடி சுப்பிரமணியத்திற்கு எவ்வித உடல்நலக்குறையும் இல்லை. மேலும் E.A.No.2/2024 என்ற மனுவில் சுப்பிரமணியத்திற்கு பதிலாக மனுதாரரை பொது அதிகார முகவராக நியமித்து சாட்சியம் அளிக்கும் சமயத்தில், சுப்பிரமணியம் நீதிமன்ற வளாகத்தில் ஆஜராகி இருந்து, மேற்படி வழக்கினை பார்வையிட்டார். மேலும் இவ்வழக்கில், சுப்பிரமணியத்தை குறுக்கு விசாரணை செய்தால், சுப்பிரமணியம் தன்னுடைய குறுக்கு விசாரணையில் அனைத்து உண்மைகளையும் தெளிவுபட கூறிவிடுவார் என்றும், பிரமாணத்தில் தெரிவித்துள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என நிரூபனமாகிவிடும் என்பதால், வழக்கில் குறுக்கு விசாரணை செய்யக்கூடாது என்று வேண்டுமென்றே இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3.3). இவ்வாறான சூழ்நிலையில் மேற்படி மனுவில் சுப்பிரமணியம் உடல்நலக்குறைவில் உள்ளதை உரிய மருத்துவ ஆவணங்களுடன் சமர்பித்து நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும் பட்சம் உரிய நீதிமன்ற ஆணையாளரை நியமித்து குறுக்கு விசாரணை மேற்கொள்ள வேண்டுமே தவிர, சுப்பிரமணியத்தின் முதல்நிலை விசாரணையினை இரத்து செய்ய முடியாது. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4. தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது யாதெனில்? இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.**

5. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

6. மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. நிறைவேற்று மனு ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. எல்லைகளை நிர்ணயிப்பதில் இருந்து நிவாரணம் மற்றும் வழக்கு சொத்தின் மீது சுவாதீனம் வழங்குவதற்காக நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு மனுதாரரை குறுக்கு விசாரணை செய்வதற்காக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரரின் மனைவி சரஸ்வதியை பொது அதிகார முகவராக நியமிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.1). மனுதாரர் தரப்பில் கடந்த 19.09.2025 தேதியில் பிரமாணதாரரின் கணவர் சுப்பிரமணியம் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 6 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சுப்பிரமணியத்திற்கு கடந்த 23.05.2025 தேதி முதல் சிறுநீரக செயலிழப்பு, கால்களில் வீக்கம், மூச்சுத்திணறல், மயக்கம், இருதயத்துடிப்பில் வேறுபாடு உள்ளிட்ட உடல்நலக் கோளாறால் மிகுந்த பாதிப்புக்கு ஆளாகியுள்ளதாகவும், மருத்துவரின் பரிந்துரையின்பேரில் வாரம் இரண்டுமுறை Hemo Dialysis (ரத்த சுத்திகரிப்பு) செய்து வருவதாகவும், மேற்படி சுப்பிரமணியம் தற்போது நடமாட முடியாமல் படுக்கையாக உள்ளதாகவும், இந்நிலையில் நேற்று 24.10.2025 தேதியில் மேற்படி வழக்கு மற்றும் இதர வழக்குகளில் பிரமாணதாரரை மனுதாரரின் தனி அதிகார முகவராக நியமிக்க வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது.

6.2). 4ம் எதிர்மனுதாரர் தரப்பில், வழக்கு மனுதாரர் தரப்பு சாட்சியத்திற்காக இடுகையிடப்பட்டுள்ளது. வழக்கின் முழு உண்மைகளையும் மனுதாரர் மட்டுமே அறிவார், அவர் தான் இந்நீதிமன்றத்தின் முன் சாட்சியமளிக்கத் தகுதியுடையவர் ஆவார். இந்நீதிமன்றத்தின் முன் சாட்சியமளிப்பதற்காக நீண்ட நேரம் நடக்கவோ நிற்கவோ மனுதாரரால் இயலாவிட்டாலும், சட்டத்திற்கு உட்பட்ட முறையில் மனுதாரர் தரப்பு சாட்சியங்களை அளிப்பதற்கு மனுதாரருக்குப் பல வழிமுறைகள் உள்ளது என ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

6.3). 9 முதல் 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில், இவ்வழக்கில், சுப்பிரமணியத்தை குறுக்கு விசாரணை செய்தால், சுப்பிரமணியம் தன்னுடைய குறுக்கு விசாரணையில் அனைத்து உண்மைகளையும் தெளிவுபட கூறிவிடுவார் என்றும், பிரமாணத்தில் தெரிவித்துள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என நிரூபனமாகிவிடும் என்பதால், வழக்கில் குறுக்கு விசாரணை செய்யக்கூடாது என்று வேண்டுமென்றே இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். இவ்வாறான சூழ்நிலையில் மேற்படி மனுவில் சுப்பிரமணியம் உடல்நலக்குறைவில் உள்ளதை உரிய மருத்துவ ஆவணங்களுடன் சமர்பித்து நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும் பட்சம் உரிய நீதிமன்ற ஆணையாளரை நியமித்து குறுக்கு விசாரணை மேற்கொள்ள வேண்டுமே தவிர, சுப்பிரமணியத்தின் முதல்நிலை விசாரணையினை இரத்து செய்ய முடியாது என ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

6.4). இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதை பரிசீலனை செய்கையில் மனுதாரர் சிறுநீரக செயலிழப்பு, கால்களில் வீக்கம், மூச்சுத்திணறல், மயக்கம், இருதயத்துடிப்பில் வேறுபாடு உள்ளிட்ட உடல்நலக் கோளாறால் மிகுந்த பாதிப்புக்கு ஆளாகியுள்ளதால், மருத்துவரின் பரிந்துரையின்பேரில் வாரம் இரண்டுமுறை Hemo Dialysis (ரத்த சுத்திகரிப்பு) செய்து வருவதால் நடமாட முடியாமல் படுக்கையாக உள்ளார் என சொல்லியுள்ளார். ஆனால் அதற்கான

மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

6.5). **உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 3 விதி 2ன் கீழ்**

**"அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் தரப்பினர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களில் எவர் மூலமாக, அத்தகைய முன்னிலையாதல்கள், விண்ணப்பங்கள் அல்லது செய்கைகள் செய்யப்படலாமோ அல்லது புரியப்படலாமோ அவர்கள், (அ) அத்தகைய தரப்பினர்கள் சார்பாக அத்தகைய முன்னிலையாதல்கள், விண்ணப்பங்கள் மற்றும் செய்கைகள் செய்யவும், புரியவும் அதிகாரமளிக்ககிற அதிகாரப் பத்திரம் கொண்டுள்ள நபர்களாவார்கள்** " என கண்டுள்ளது.

மேற்படி சட்டப்பிரிவுகளின் படி மனுதாரருக்கு அவரது கணவர் சுப்பிரமணியம் பொது அதிகார ஆவணம் வழங்கியுள்ளார். மேற்படி பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் மனுதாரருக்கு இந்த வழக்கை தொடர்ந்து நடத்தவும், சாட்சியம் அளிக்கவும் அதிகாரம் வழக்கப்பட்டுள்ளது. மனுதாரர் மனுவில் சொல்லப்பட்டதை கருத்தில் கொண்டும், நீதியின் நலன் கருதியும் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 19ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**தூலூர்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-</u>**

இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-</u>**

இல்லை

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

Draft/ Fair Order
EA.No.3/2025 in
EP.No.1/2025 in
OS.No.775/2017
Dated : 19.01.2026
DMC, Sulur.